# விலைகள், கூலிகள் தொழில்நிலை

## பொதுவான விலை மாற்றங்கள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1987 இல் சில்லறை விலைகள் மிகக் குறைந்த வீதத்திலேயே அதிகரித்தன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி வீத அதிகரிப்பு முன்னைய ஆண்டின் அதிகரிப்பு வீதமான 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதமாக இருந்தது. உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட அசைவுகளை அளவிடும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1986 இல் ஏற்பட்ட 2.9 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1987 இல் 13.4 சதவீதத்தினால் அதிகரித்தது.


1987 இல் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பல காரணிகள் உதவியதுடன் இவ்விலை அதிகரிப்புக்கள் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பெருமளவில் கூடுதலாகக் காணப்பட்டன. இக் காரணிகளில் சில வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தியைப் பாதித்த வரட்சியின் பாதகமான தாக்கம், புகையிலை, மது வகை என்பன மீதான உயர்ந்த கலால் தீர்வை, வடக்கு கிழக்கு மாகாணங்களின் குழப்ப நிலைமை, ஏற்றுமதிப் பண்டங்களுக்கான உயர்ந்த பன்னாட்டு விலைகள் என்பனவாகும். கேள்விப் பக்கத்தில் 1984 ஆம் ஆண்டிலிருந்தும் தொழிற்பாட்டிலிருந்த கட்டுப்பாடான கொடுகடன் கொள்கைகள் சில தளர்த்தப்பட்டமை குறிப்பாக 1987 இன் இறுதி மாதங்களில் வங்கிக் கொடுகடன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க விரைவினை ஏற்படுத்தின. எனினும், பொதுவான விலை அதிகரிப்பின் அளவினைக் கட்டுப்படுத்துவதில் எரிபொருள் எண்ணெய் விலைகளின் உறுதித்தன்மை முக்கிய காரணியாக விளங்கியது.

## நுகர்வோர் விலைகள்

1987 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1986 இன் 8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இது விலை அதிகரிப்பு ஒன்றை இலக்க வீதத்தில் காணப்பட்ட 1978 ஆம் ஆண்டின் பின்னர், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஏற்பட்டுள்ளது. எனினும் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1986 திசெம்பரை விட 1987 திசெம்பரில்) சுட்டெண் 10.2 சதவீதத்தினால் அதிகரித்து ஆண்டின் இறுதி மாதங்களில் விலைகள் மிகக் கூடியளவில் உயர்வடைந்தமையைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டின் தொடர்பான அதிகரிப்பு 9.1 சதவீதமாகும்.

1987 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலைகளின் நடத்தை ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியின் விலைகளில் ஏற்பட்ட மிகக் கூடிய அதிகரிப்பின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. 1987 இன் முதற் காலாண்டுப் பகுதியில் மெதுவாக அதிகரித்த விலைகள் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மிதமாக அதிகரித்தன. மூன்றாம் காலாண்டுப் பகுதியில் பருவகாலக் காரணிகள் விலை அதிகரிப்பு வீதத்தை தடுப்பதற்கு உதவின. எனினும் நான்காம் காலாண்டில் விலைகள் மிக விரைவான வீதத்தில் உயர்வடைந்தன.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
1974 = 100
மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பில் நான்கில் மூன்றுக்குக் கூடுதலான பங்கிற்கு உணவு விலைகளின் அதிகரிப்பே காரணமாகும். 8.7 சதவீதத்தினால் அதிகரித்த உணவுத் துணைச் சுட்டெண் (நிறையேற்றப்பட்ட 61.9 சதவீதம்) 1986 இல் பதிவு செய்யப்பட்ட 7.2 சதவீத அதிகரிப்பினைவிட உயர்ந்த வீதத்தில் காணப்பட்டது. அரிசி, தேங்காய், செத்தல் மிளகாய் என்பனவற்றின் உற்பத்தியைப் பாதித்த வரட்சியின் தாக்கம் இப்பண்டங்களின் விலைகளையும் பாதித்தது. தெங்கு உற்பத்திகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த பன்னாட்டுக் கேள்வியும் தேங்காய், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் உள்நாட்டு விலைகளை மேலும் பாதித்தன. இவ்வாண்டுக் காலத்தில் சீனியின் விலை மேல்நோக்கித் திருத்தப்பட்டவேளையில் மாட்டிறைச்சியின் விலையும் அதிகரித்தது.

1987 இல் 7.0 சதவீதத்தினால் அதிகரித்த ஆடைகளுக்கான துணைச் சுட்டெண் (நிறை ஏற்றப்பட்ட 9.4 சதவீதம்) 1986 இல் பதிவு செய்யப்பட்ட 15.5 சதவீத அதிகரிப்பினை விடக் குறைவாகவே இருந்தது. பொதுவான விலை அதிகரிப்பிற்கு ஆடை விலைகளின் பங்களிப்பு மிகக் குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை. எரிபொருள் வெளிச்சத்திற்கான துணைச் சுட்டெண் 0.8 சதவீதத்தினால் சிறிதளவில் உயர்வுற்றமைக்கு விறகு விலைகளின் அதிகரிப்பே காரணமாகும்.

1987, 1988 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத் திட்டங்களில் புகையிலை, மதுவகை மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டமை பல்வகை விடயங்களுக்கான துணைச் சுட்டெண் உயர்ந்தமைக்கு முக்கிய உதவு காரணியாக விளங்கியது. இத்துணைச் சுட்டெண் 8.5 சதவீதத்தினால் உயர்வடைந்ததெனினும் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 14.4 சதவீதத்தினைவிடக் குறைவாகவே இருந்தது.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் ஏற்றுமதி விலைகள் முன்னைய ஆண்டின் 24.1 சதவீதங் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 53.3 சதவீதங் கொண்ட உயர்வினைப் பதிவுசெய்தமைக்குத் தெங்கு விலைகளில் ஏற்பட்ட சடுதியான உயர்வே காரணமாகும். உள்நாட்டு விலைகளும் இறக்குமதி விலைகளும் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 12.2 சதவீதம், 6.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 6.6 சதவீதத்தினாலும், 3.3 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

**மொத்த விற்பனை விலைகள்**

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1985 ஆம், 1986 ஆம் ஆண்டுகளில் முறையே தொடர்ந்து 15.2 சதவீத, 2.9 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்த பின்னர் 1987 இல் 13.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இச்சுட்டெண் முதலாந் தரச் சந்தை மட்டத்திலான விலைகளின் அசைவின் ஒரு குறிகாட்டியாகும். எனினும் சுட்டெண்ணில் ஏற்றுமதிப் பொருட்களுக்கு உயர்ந்த நிறை வீதம் அளிக்கப்பட்டமையின் விளைவாக மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினால் காட்டப்பட்ட போக்கினை இவ்விடயங்களே தீர்மானிக்கின்றன. 1986 இன் பிற்பகுதியில் இருந்து தேயிலை, தெங்கு என்பவற்றின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றம் இச்சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கான முக்கிய காரணியாக விளங்கியது. புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில் (1986 திசெம்பருக்கு மேலாக 1987 திசெம்பர்) இச்சுட்டெண் முந்திய ஆண்டின் தொடர்பான காலத்தில் ஏற்பட்ட 12.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 13.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஆண்டின் முதல் அரைப் பகுதியில் சுட்டெண் தளம்பலுற்ற வேளையில் இரண்டாவது அரைப் பகுதியில் செத்தெம்பர் நீங்கலான எல்லா மாதங்களிலும் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. சுட்டெண்ணின் போக்கு ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது.

பண்டங்களின் அடிப்படையில் உணவுத் தொகுதிக்கான துணைச் சுட்டெண் முந்திய ஆண்டின் 6.6 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 19 சதவீதத்தினால் அதிகரித்தது. உயர்வான கலால் தீர்வை காரணமாக மதுபானங்களின் விலைகள் அதிகரித்தன. புடவைகளும், காலணியும், தாள் உற்பத்திகள், உலோக உற்பத்திகள், போக்கு வரத்துக் கருவிகள், மின் உபகரணங்களும் நிரம்பல்களும், பொறிகள், விறகு, பல்வகை உற்பத்திகள் என்பனவற்றின் விலைகள் அதிகரித்தவேளையில் இரசாயன உற்பத்திகளும் உலோகமல்லா உற்பத்திகளும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் 1984 இல் இருந்து மாற்றமின்றியிருந்தன.

துறைவகைப்படி உள்நாட்டு விடயங்களின் விலைகள் அதிகரித்தன. ஆனால் இவ்வதிகரிப்பு 1986 இனை விடக் குறைவான வீதத்தில் அமைந்தது. முந்திய ஆண்டில் சிறிதளவினால் வீழ்ச்சியடைந்த இறக்குமதி விலைகள் 1987 இல் 2.1 சத வீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதி விடயங்களின் விலைகள் முந்திய இரு ஆண்டு களிலும் கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவு செய்து, பின்னர் 38.2 சதவீதத்தினால் கணிசமான அளவில் அதிகரித்தன.

**கூலிகள்**


1987 இல் அரச ஊழியர்களின் கூலி வீதங்கள் 1986 சனவரி தொடக்கம் நிலவிய அளவிலேயே நிலையாக இருந்தன. வாழ்க்கைச் செலவுப்படி 1985 சனவரியின் மட்டமான ரூ. 504 இல் நிலைத்திருந்தது. அரச பாடசாலை ஆசிரியர் களின் கூலிகள் 1985 தொடக்கம் நிலவிய மட்டத்திலேயே தொடர்ந்தும் மாற்றமின்றி விளங்கின.


நன்கமைந்த தனியார்துறையில் பல வகுப்புக்களைச் சேர்ந்த வேலையாட்கள் இவ்வாண்டில் கூலி அதிகரிப்புக்களைப் பெற்றனர். பெயரளவிலான நியதிகளில் கூலி நிர்ணய சபையினால் உள்ளடக்கப்பட்ட வர்த்தகத்திலுள்ள எல்லா ஊழியர் களினதும் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் முந்திய ஆண்டின் 5.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் சராசரியாக 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் 1986 இன் விலையுடன் ஒப்பிடுகையில் 1987 இல் உண்மைக் கூலிகள் 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. வேளாண்மையிலுள்ள வேலையாட்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் இவ்வேலையாட்களுக்குச் செலுத்தப்பட்ட வேறுபட்ட வாழ்க்கைச் செலவுப்படி காரணமாக 1987 இல் 4.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. முந்திய ஆண்டின் தொடர்பான அதிகரிப்பு 5.3 சதவீதமாக விளங்கியது. கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்களும் சார்பு ரீதியில் உயர்வான கூலி அதிகரிப்பினைப் பெற்றனர். பெயரளவில் இத் தொழிலாளர்களுக்கான ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் 1986 இன் 10.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வகுப்பைச் சார்ந்த தொழிலாளர்களின் கூலிகள் 1986 உடன் ஒப்பிடுகையில் உண்மை நியதியில் முன்னேற்றமடைந்தன. இவ் ஆண்டின்போது கூலி அதிகரிப்புக் களைப் பெற்றவர்களாக ஆடை தயாரிப்பு, உறைநீர்க் கட்டியும், வாயுவடைக்கப்

## கூலி வீதச் சுட்டெண்கள்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

பட்ட நீரும், தோலும் காலணியும், வைத்திய நிலையங்கள், படக்காட்சி, அச்சிடல், கட்டிடம் ஆகிய வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் விளங்கினர். 1986 இல் மாற்றமின்றி விளங்கிய பணிகளிலுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் 1987 இல் 3.1 சதவீதத்தினுல் உயர்வடைந்தது.

அட்டவணை 1.27

கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின் கூலி வீதச் சுட்டெண்கள்

| வகை | பெயரளவு கூலிகள் | | | உண்மைக் கூலிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | சதவீத மாற்றம் | 1986 | 1987 | சதவீத மாற்றம் |
| பொதுவான சுட்டெண் ... | 261.3 | 277.7 | 6.3 | 103.2 | 101.8 | — 1.4 |
| துணை த்துறைகள் | | | | | | |
| 1. வேளாண்மையிலுள்ள தொழிலாளர்கள் ... | 288.1 | 302.3 | 4.9 | 113.8 | 110.8 | — 2.6 |
| 2. கைத்தொழில், வர்த்தகம் ஆகிய வற்றில் உள்ள தொழிலாளர்கள் ... | 224.3 | 256.3 | 14.3 | 88.6 | 93.9 | 6.0 |
| 111. பணிகளிலுள்ள தொழிலாளர்கள். ... | 190.7 | 196.6 | 3.1 | 75.3 | 72.0 | — 4.4 |

மூலங்கள்: தொழிற்றிணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

## தொழில்நிலை

தற்காலிக மதிப்பீடுகளின்படி 1987 இல் தனியார்துறையின் தொழில்நிலை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தவேளையில் அரசதுறையின் தொழில் நிலை சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் அரசதுறையில் அரச நிறுவனங் கலில் தொழில் புரிந்தோரின் எண்ணிக்கை சிறிதளவால் அதிகரித்தவேளையில் அரசுசார் நிறுவனங்களில் உள்ளோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது.

அரசதுறைத் தொழில்நிலை மதிப்பீடுகள் அரசின் அமைச்சுக்களின் உதவி யுடன் மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட அரசதுறைத் தொழில்நிலை மீதான அளவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவ் அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி மொத்த அரசதுறைத் தொழில்நிலை 1.5 சதவீதத்தினுல் சிறிதளவினுல் வீழ்ச்சி யடைந்து 1987 இன் இறுதியில் 1,194,000 ஆக விளங்கியது. இது 1986 இன் இறுதியில் காணப்பட்ட 1,212,000 உடன் ஒப்பிடத்தக்கது. அரசதுறையின் மொத்தத் தொழில்நிலையில் ஏறக்குறைய 749,000 பேர் அரசுசார் நிறுவனங் களில் தொழில்புரிந்தவேளையில் மீதியான 445,000 பேர் அரச நிறுவனங்களில் காணப்பட்டனர். அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினுலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தினுலும் நிருவகிக்கப்படும் தோட்டங்களில் தொழில் புரியும் மொத்தமாக, 409,042 பெருந்தோட்ட வேலையாட்களை உள்ளடக்கியிருந்தது.

1987 இன் அரசதுறையின் துறைவாரியான தொழில்நிலைப் பாதுகாப்புப் பணிகள், கல்வி, நலத்துறை, மகாவலித் திணைக்களம், அரச வர்த்தகம், பொது நிருவாகம் என்பவற்றில் அத்தகைய நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாகத் தொழில்வாய்ப்பு அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது. எனினும் கைத்தொழில் அரச பெருந்தோட்டம் கட்டடவாக்கம் போன்ற துறைகளில் 1986 உடன் ஒப்பிடுகையில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் போன்ற அரச நிறுவனங்களில் மொத்த வேலை வாய்ப்பு 1986 இன் 443,700 இலிருந்து 1987 இல் 445,000 இற்குச் சிறிதளவால் அதிகரித்தது. மறுபுறம் அரச கூட்டுத்தாபனங்கள், மேலாண்மைச் சபைகள், சட்ட நியதிச் சபைகள், ஏனைய நிறுவனங்கள் போன்ற அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 1986 இன் மதிப்பிடப்பட்ட மொத்தம் 768,000 இலிருந்து 1987 இல் 749,000 இற்கு மிதமான வீழ்ச்சியைக் காட்டியது. அரசுசார் துறையின் தொழில்நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சி 1980 இன் முற்பகுதி களில் அவதானிக்கப்பட்ட போக்குடன் ஒத்து விளங்கியது. எனினும் அரசுசார் துறையினுள் போக்குவரத்துச் சபைகள், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் போன்ற நிறுவனங்களின் தொழில் வாய்ப்பு அதிகரித்தவேளையில் அரச பெருந் தோட்டங்கள், கட்டடவாக்கம் தொடர்பான கூட்டுத்தாபனங்களின் தொழில் நிலை வீழ்ச்சியடைந்தது.

அரசதுறையின் தொழில் வகைப்படியான தொழில்நிலையின் பகுப்பு 1987 இறுதியில் மொத்தம் 549,000 ஆக விளங்கிய உடல் உழைப்பாளரே (பகுக்கப் படாதது) தொழிலாளரில் மிகப் பெரும் தனிவகுப்பாக விளங்கியமையைக் காட்டுகின்றது. இது தோட்டத் தொழிலாளர்களை இவ்வகுப்பில் உள்ளடக்கியமை யினல் ஏற்பட்டதாகும். எழுதுவினைஞரும் அது தொடர்பான வேலையாட்களும், தகைமைபெற்ற தொழில்நுட்ப மற்றும் இவற்றுடன் தொடர்புடைய வேலை யாட்களும் 1987 இன் இறுதியில் முறையே 227,000 வேலையாட்களையும், 221,000 வேலையாட்களையும் கொண்டு இரண்டாம் மூன்றும் இடத்தை வகித் தனர். தகைமைபெற்ற, தொழில்நுட்ப மற்றும் அவை தொடர்பான வேலை யாட்களில் அரச பாடசாலையில் தொழில்புரியும் மொத்தம் 140,000 ஆசிரியர் களும் உள்ளடங்குவர். பணித்தொழிலாளர், விற்பனைத் தொழிலாளர், எழுது வினைஞரும் அது தொடர்பான வேலையாட்களும், நிருவாக, முகாமைத்துறை வேலையாட்கள், தகைமைபெற்ற, தொழில்நுட்ப மற்றும் அது தொடர்பான வேலையாட்கள் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ளவரின் எண்ணிக்கை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிதமாக அதிகரித்தது. இதற்கு மாறாக வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காட்டுத்தொழில் வேலையாட்களும், கடற்றொழிலாளரும் வேட்டையாடுவோரும், உற்பத்தி மற்றும் இது தொடர்பான வேலையாட்களும், போக்குவரத்துக் கருவிகள் தொழிற்படுத்துவோர், உடல் உழைப்பாளர் போன்ற வற்றின் வகுப்பில் உள்ள தொழிலாளர் நிலை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1987 இல் வீழ்ச்சியைக் காட்டியது.

அரசதுறையின் மொத்தத் தொழில்நிலையில் 74 சதவீதம் ஆண் தொழிலாள ராக அமைந்த வேளையில் மீதி 26 சதவீதம் பெண்களாகக் காணப்பட்டனர் பெருந்தொகையிலான பெண்கள் எழுதுவினைஞராகவும் அது தொடர்பான வேலை யாட்களாகவும் காணப்பட்டனர். மொத்தத் தொழில் நிலையில் ஒழுங்கான தொழிலாளர் 93 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் நாளாந்த அடிப்படை யிலான தொழிலாளர் மீதியான 7 சதவீதமாக அமைந்தனர். நாளாந்த வேலை யாட்களில் பெரும்பாலானோர் உடலுழைப்புத் தொழிலாளராக இருந்தனர்.

அனைத்தையுமுள்ளடக்கியதும், ஒழுங்கானதுமான மூலத்தின் அடிப்படையில் தரவுகள் இல்லாமையினுல் ஊழியர் சேமநிதியம் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதியங்களின் பதிவேடுகளைப் பயன்படுத்தித் தனியார்துறையின் தொழில்நிலை மதிப்பிடப்பட்டுள்ளது. நன்கமையாத துறையும், சுயதொழில் புரிவோரும் சேம நிதியங்களுக்கு உதவுதொகை வழங்காமையினுல் இவற்றிலுள்ள தொழில்நிலையினை இப்பதிவேடுகள் உள்ளடக்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வடிப்படையில் தனியார்துறையின் நன்கமைந்த தொழில்நிலை 1986 இன் இறுதியில் 326,000 ஆக மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகை யில் 1987 இறுதியில் ஏறக்குறைய 330,000 ஆக மதிப்பிடப்பட்டு ஒரு சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் வரும் தொழில் முயற்சிகளின் தொழில்நிலை, ஆய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்து அதிகரித்தது. 1987 இன் இறுதியில் கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக் குழு தொழில் முயற்சிகளின் மொத்தத் தொழில்நிலை முந்திய ஆண்டின் 45,047 உடன் ஒப்பிடுகையில் 50,744 ஆக அமைந்து 12.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வளர்ச்சிக்கான முக்கிய காரணிகளாக, கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கூறுகளின் விரிவாக்கமும், புதிய உற்பத்திக் கூறுகள் முக்கியமாக 1986 இன் பிற்பகுதியில் நிறுவப்பட்ட பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் பல கூறுகள் ஆரம்பிக்கப் பட்டமையும் விளங்கின.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு, உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு இரண்டினதும் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் நடவடிக்கைகள் தனி யார்துறையின் தொழில்நிலை அதிகரிப்பதற்கான காரணியாக அமைந்திருக்கலாம். 1987 இல் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் உள்ளார்ந்த தொழில் ஈர்ப்பு இயலளவு 6,854 இல் இருந்து 6,937 இற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டவேளையில் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவில் இது 1986 இன் 9,659 இலிருந்து 14,594 இற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.